தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப.,

- - - - - - - - -

ந.க.இ1/5610/19 நாள்: .05.2019

| | |
|---|---|
| பொருள்: | தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் சட்டம் 2017 - புதிய சட்டப் பிரிவு 30 ன் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தின் அனைத்து வருவாய் கோட்டத்திற்கும் வாடகை அதிகாரிகளை நியமித்தல் - ஆணைகள் பிறப்பித்தல் - தொடர்பாக. |
| பார்வை: | 1) தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/ வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் சட்டம் 42/2017<br>2) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண் 35 நாள்:22.02.19<br>3) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை எண் 36 நாள்:22.02.19<br>4) சென்னை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் அவர்களின் கடிதம் 867/HB4/2019-1 நாள்:25.02.2019 |

------------------

**ஆணை**

தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/ வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் சட்டம் 42/2017 ஆனது 22.02.19 முதல் நடைமுறைக்கு வரப்பெற்றுள்ளது. மேற்படி தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/ வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் புதிய சட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு தூத்துக்குடி மாவட்டத்தில் துணை ஆட்சியர் நிலையில் கோட்டம் வாரியாக கீழ்க்கண்ட அலுவலர்களை வாடகை அதிகாரிகளாக நியமித்து உத்தரவிடப்படுகிறது.

| வரிசை எண் | கோட்டம் | நியமன அதிகாரிகள் | தொடர்புடைய வட்டங்கள் |
|---|---|---|---|
| 1. | தூத்துக்குடி | சார் ஆட்சியர், தூத்துக்குடி | தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம் |
| 2 | திருச்செந்தூர் | வருவாய் கோட்டாட்சியர், திருச்செந்தூர் | திருச்செந்தூர், ஏரல், சாத்தான்குளம் |
| 3 | கோவில்பட்டி | வருவாய் கோட்டாட்சியர், கோவில்பட்டி | கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம், எட்டயபுரம், கயத்தார் |

மேற்படி ஆணை பிறப்பிக்கப்பட்ட நாள் முதல் மேற்கண்ட அலுவலர்கள் தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் சட்டம் 42/2017 ன் படி தங்கள் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளின் வாடகை அதிகாரிகளாக செயல்படுமாறு உத்திரவிடப்படுகிறது. மேலும், தமிழ்நாடு சொத்து உரிமையாளர்/வாடகைதாரர்கள் முறைப்படுத்தும் சட்டம் 42/2017 தொடர்பாக பார்வை 2, 3, ல் காணும் அரசாணைகள் மற்றும் பார்வை-4 ல் காணும் அரசு கடித நகல் ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்கண்ட அரசாணைகள் மற்றும் அரசுகடிதத்தில் தெரிவித்துள்ளவாறு செயல்பட அனைத்து நியமன அலுவலர்களுக்கும் உத்திரவிடப்படுகிறது.

இணைப்பு: மேற்கூறிபடி.

மாவட்ட ஆட்சியர்,
தூத்துக்குடி.

பெறுநர்

1. சார் ஆட்சியர், தூத்துக்குடி.
2. வருவாய் கோட்டாட்சியர், திருச்செந்தூர்.
3. வருவாய் கோட்டாட்சியர், கோவில்பட்டி.

8.5.2019

நகல் :

1. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை - 05.
2. முதன்மைச் செயலர் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை.
3. அரசு செயலர் சட்டத்துறை, சென்னை - 09.
4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சென்னை - 09.
5. அனைத்து வட்டாட்சியர்கள்.